DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 42/2021

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | தேவநாதன் |
| Father / Husband Name | பாலசுப்புரமணியன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 08.11.2024

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. எதிரி என்னிடம் கொடுத்த 10 காசோலைகளில் இந்த வழக்கில் எத்தனை காசோலை தாக்கல் செய்கிறேன் என்றால் ஒரு காசோலை தான். என்னிடம் காட்டப்படும் மசாஆ1 காசோலை தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காசோலை தொகையை எதிரி தான் நிரப்பினார். காசோலையில் உள்ள விவரங்கள் அனைத்தையும் எதிரி தான் நிரப்பி கொடுத்தார். 12.11.2019 ம் தேதியில் காசோலையை நிரப்பி என்னிடம் மதியம் 3.00 மணியளவில் கொடுத்தார். நான் 13.12.2019 ம் தேதி காசோலையை வங்கியில் டெபாசிட் செய்தேன். என்னிடம் இருக்கும் எதிரி கொடுத்த பாக்கி 9 காசோலைகள் எப்போது கொடுக்கப்பட்டது என்றால் வழக்கு காசோலை கொடுப்பதற்கு முன்பே கொடுத்துவிட்டார். ஒரு மாதம் முன் பின் ஒவ்வொரு காசோலையாக கொடுத்தார். எல்லா காசோலைகளிலும் எதிரி தொகையை நிரப்பி என்னிடம் கொடுத்தார்.

2. ஒவ்வொரு காசோலையிலும் ரூபாய் 2 லட்சம், 1 லட்சம், 67000 என்று நிரப்பி கொடுத்துள்ளார். எதிலும் காசு இல்லை. மேற்படி விவரங்களை எனது புகாரிலும் நிரூபணவாக்குமூலத்திலும் சொல்லவில்லை. மேற்படி 9 காசோலைகளிலும் பணம் இல்லை என்று எவ்வாறு கூறுகிறேன் என்றால் வங்கியில் காசோலைகளை செலுத்தினேன். மேற்படி 9 காசோலைகளும் திருப்பப்பட்டது. எந்தெந்த தேதியில் காசோலைகள் திருப்பப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி திருப்பபட்ட காசோலைகள் சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. பணத்தை திருப்பி தருவதாக சொன்னதால் வழக்கு தொடரவில்லை.

3. முதலில் ரூபாய் 10 லட்சம் எதிரி என்னிடம் தரவேண்டிய பணமாக இருந்தது. அதில் சிறிது தொகையை கையிலும் வங்கியிலும் செலுத்திவிட்டார். தற்போது ரூபாய் 6 லட்சம் எனக்கு தரவேண்டிய கடன் உள்ளது. மேற்படி விவரத்தை எனது புகாரிலும் பிரமாணவாக்குமூலத்திலும் சொல்லவில்லை. எதிரி என்னிடம் எதுவும் நிரப்பப்படாத

காசோலை கொடுத்தார் என்றாலும் அதை நான் நிரப்பிக்கொண்டு தவறாக பயன்படுத்தி எதிரியின் மீது காசோலை மோசடி வழக்கு பொய்யாக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு உண்மையான வழக்கு என்றால் அனைத்து சங்கதிகளையும் சொல்லி வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளதால் விவரங்களை மறைத்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி எனக்கு எந்த பணமும் தர கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.